வேண்டிய நேரங்களில் அவர்களுடைய தாய் மொழி தமிழ் என்று சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அங்கிருக்கும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். எல்லோரும் விவசாயிகள். அவர்கள் ஏழைகளாகவும் இருப்பதால், அவர்களைப் பிற்பட்ட வகுப்பினர் என்று சொல்வதற்கு அரசு மீண்டும் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: விதிமுறைப்படி இப்பொழுது கொடுக்கப்பட்டிருப்பது சரி என்பதைக் கனம் உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர் சொன்ன வேண்டுகோளை, சமயம் வரும்போது பரிசிலனை செய்ய சார்க்கார் முற்படும்.

(3) நடைமுறைக் கேள்வி

உரிமைக் குழுவிற்கு அனுப்பாமல், ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினை மீது பேரவைத் தலைவரே தீர்ப்பு வழங்கலாமா என்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நேற்று ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள். அதற்கு இன்று என்னுடைய முடிவைத் தெரிவிப்பதாகக் கூறியிருந்தேன்.

உரிமை மீறிய செயல் பற்றிய நடவடிக்கை இரு வேறு நிலைகளை உடையது. உரிமை மீறல் செயல் மேலெழுந்தவாரியாக நிகழ்ந்துள்ளதா என்பதை உறுதி செய்வது ஒரு நிலை; இது இரு வகைகளில் உறுதி செய்யப் படும். உரிமை மீறிய நிகழ்ச்சியை, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், பேரவைத் தலைவர் அனுமதி பெற்று இவ்வவையில் எழுப்பி, உரிமை மீறல் செயல் மேலெழுந்தவாரியாக நிகழ்ந்துள்ளது என்பதை உறுதி செய்ய விளக்கம் அளித்த பின்னர், பேரவைத் தலைவர், 189-வது விதியின் முற்பகுதிப் படி, உரிமை மீறிய செயல் மேலெழுந்தவாரியாக நிகழ்ந்துள்ளது என முடிவெடுப்பது ஒரு வகை.

192-வது விதியின் முற்பகுதிப்படி உரிமை மீறிய செயல் நிகழ்ந்துள்ளது எனப் பேரவைத் தலைவர், தாமாகவே முடிவெடுப்பது இரண்டாவது வகை.

அவ்வாறு முடிவெடுத்த பின்னர், உரிமைக் குழுவிற்கு அனுப்புவது, அல்லது பேரவையே முடிவெடுப்பது ஆகிய இரு முறைகள் மேற்கொள்ளப் படும். அந்த நிலை வந்து, உரிமைக் குழுவிற்கு அனுப்பும்போது, 189-வது

விதியின் இடைப் பகுதிப்படி, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், அவ்வாறு ஒரு தீர்மானம் கொண்டுவர, அவை ஒப்புதல் அளித்து அனுப்புவதும், 192-வது விதியின் பிற்பகுதிப்படி, பேரவைத் தலைவர் தாமே அனுப்புவதும் ஆகிய இரு முறைகள் மேற்கொள்ளப்படும்.

உரிமைக் குழுவிற்கும் மேலான அதிகாரம் படைத்தது, பேரவைத் தலைவருக்கும் மேலான அதிகாரம் படைத்தது இப்பேரவை. அத்தகைய அதிகாரம் படைத்த இப்பேரவை, 189-வது விதியின் இறுதிப் பகுதிப்படி, தானே முடிவெடுக்க விரும்பிவிட்டால், அதை மறுத்து உரிமைக் குழுவிற்கு விட வேண்டும் என வாதிட இயலாது.

இந்த விதிமுறைகளின் பின்னணியில், அன்று அந்த அம்மையார் இந்த அவையிலே துண்டுத் தாளை வீசிய உரிமை மீறிய நிகழ்ச்சி மேலெழுந்த வாரியாக நிகழ்ந்துள்ளது என்ற முடிவை மட்டுமே பேரவைத் தலைவர் அளித்தார்.

அன்று நான் கூறியது—"பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஜகதீஸ்வரி என்ற பெண், பார்வையாளர் மாடத்திலிருந்து அச்சடித்த அறிக்கைகளை மன்றத் திற்குள் வீசியெறிந்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இது இந்த அவையின் உரிமை மீறிய நிகழ்ச்சியாகும் என்று தெரிவித்துக் கொண்டு, இதுபற்றி பேரவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவருவார்கள்" என்ற அளவில் கூறியிருக்கிறேன்.

192-வது விதியின் முற்பகுதிப்படி அந்த உரிமை பேரவைத் தலைவருக்கு உண்டு; ஆகவே, எடுத்த முடிவு தவறு ஆகாது.

அவ்வாறு முடிவெடுத்த பின்னர், 189-வது விதியின் இறுதிப் பகுதியை ஒட்டி அவைமுன்னவர், இவ்வவையில் ஒரு தீர்மானம் கொண்டுவர, அதை அவை ஏற்றுக் கொள்ள, அவை ஏற்றுக் கொண்ட தீர்மானத்தைப் பேரவைத் தலைவர் செயல்படுத்தியுள்ளார். ஆக, இவ்வவைக்கு உரிய எந்த உரிமையையும் பேரவைத் தலைவர் கட்டுப்படுத்தவில்லை; விதிமுறை எதுவும் மீறப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு இதுவே என் தீர்ப்பு ஆகும்.

1973 ஆகஸ்டு 10] *[மாண்புமிகு பேரவைத் தலைவர்]*

மேலும் அன்றைய நிகழ்ச்சி இப்பேரவையையே அவமதித்த செயலாகும். அதற்கு இப்பேரவையே தீர்ப்பளிப்பதுதான் முறையாகும். அதை விடுத்து, தவறு செய்தவரைக் கைது செய்து பேரவைத் தலைவர் அறையில் இருக்கச் செய்துவிட்டு, அதுபற்றி என்ன செய்யலாம் என ஆய்ந்து கூறுங்கள் என அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவிட்டு அக்குழுவின் முடிவு வரும் வரை காத்திருக்கலாம் என்பது இயலாது. அதுவரை, கைது செய்தவரை எங்கே வைத்திருப்பது போன்ற சங்கடமான நிலைமைகள் எல்லாம் ஏற்படும். ஆகவே, அன்று பேரவை எடுத்த முடிவே முறையானது.

The author, Philip Laundy in his book ' The Office of Speaker ' has observed as follows :

" As the guardian of privilege it stands to reason that the Speaker must also be the judge of, when acts involving breach of privilege has been established........

" The Speaker himself during the 1945-46 session of Parliament drew the attention of the House to a breach of privilege committed against an officer of the House. . . . .

" For offences committed in his presence, the Speaker when accompanied by the mace, is empowered to order the persons ' committal without a previous order of the House ". என்று பேரவைத் தலைவர்கள் எல்லாம் முடிவெடுத்திருக்கிறார்கள். மேலும் ஒரு உதாரணம் கூட இருக்கிறது

In 1971 in the U.P. Vidhan Sabha, two persons threw leaflets from the Visitors' Gallery on the floor of the House. They were immediately taken into custody and removed from the visitors' gallery. அதோடு நிற்கவில்லை. அவரே அதற்கு ஒரு முடிவும் கொடுத்திட்டார் Soon thereafter, the Deputy Speaker informed the House abtout the arrest of the persons and suggested to the House that no action need be taken against them since they had become unconscious and they had to be sent to hospital for treatment என்ற முடிவையும் எடுத்திருக்கிறார்கள். ஆகவே எந்த விதமான முறை கேடும் நிகழவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.